விற்பனைக்கல்ல... தனிச்சுற்றுக்கு மட்டும்

புதிய ஆரம்பம்

2025 November 16-30

இன்று

ஈ இதழ்



நீ மட்டும்
சந்தோசப்பட்டால்
இளிப்பு...

அடுத்தவர்
மகிழ்ந்தால்
சிரிப்பு...

இன்று கோபி

அனைவருக்கும் வணக்கம்.

சென்ற இதழை பலரும் பாராட்டினார்கள். பொதுவான செய்திகள் குறைவாக உள்ளது என்றார்கள். இனி அதிக செய்திகளை வழங்க முயற்சிக்கிறோம்.

படைப்பாளர்களின் படைப்புகளை லே அவுட் செய்வதில் சில மாற்றங்கள் செய்துள்ளோம்... அது பற்றிய உங்கள் கருத்துக்களை தெரிவியுங்கள்...

எல்லா பக்கங்களின் மேலே பக்க எண் அருகில் குட்டி செய்திகள், ஒரு வரி செய்திகள், பொது அறிவுச் செய்திகள், பொன் மொழிகள்.... இது போன்ற தலைப்புகளில் வெளியிட்டு வருகிறோம். வாசகர்களும் 20 செய்திகளை சுருக்கமாக அனுப்பவும்.

2026 ஜனவரியிலிருந்து ஒரு வாசகரை இணை ஆசிரியராக நியமித்து அவர் தயாரித்து தரும் படைப்புகளையும், அவரின் விருப்பங்களையும் வெளியிட இருக்கிறோம். நீங்களும் தயாரிக்கலாம். உங்கள் விருப்பத்தை இன்று குழுமத்திற்கு தெரிவிக்கவும். மேலதிக விபரங்களை அனுப்புகிறோம்.

நமது வாட்சப் சேனல், முக நூல் பக்கம், வலைதளம் ஆகியவைகளை அவ்வப்போது சென்று பாருங்கள்... உங்கள் கருத்துக்களையும் பகிருங்கள்...

புதிய ஆண்டில் நாம் அனைவரும் இணைந்து பணியாற்றுவோம்...

அனைவருக்கும் நன்றி...

வெ.கோபிநாத், ஆசிரியர்.

இன்ஸ்டண்ட் கவிதைகள்

முத்து ஆனந்த், வேலூர்.

பலி

ஆடுகள்
கோழிகள் பலி
புரட்டாசி மறைந்த பின்!

ஆசை

காற்றும்கூடப்
புரட்டிப் படிக்கிறது
புத்தகங்களை!

பழக்கம்

காணொளி வந்த பின்
காணாமல் போயிற்று
படிக்கும் பழக்கம்!

சிலர்

படிப்பறிவு இல்லாவிடினும்
பகுத்தறிவுடன் வாழ்கின்றனர்
ஒரு சிலர்!

உறக்கம்

தேசபக்தி
உறங்குவதால்
மலிந்து விட்டது ஊழல்!

வேடிக்கை

விபத்தையும்
வேடிக்கை பார்க்கும் தருணம்
மொபைல் காலம்!

மத்தாப்பூ

அவள்
எதிரே வரும் போதெல்லாம்
என் மனசுக்குள் மத்தாப்பூ!



கிழிக்கப்பட்ட தேதி
பைனான்ஸ் கம்பெனியும்
அரசியல்வாதியின்
வாக்குறுதியும்

வி.நௌஷத் கான்

அந்த கடலலைகள்
உன்னிடமிருந்து திருடிச்
சென்றது?
பாத கவிதைகளை!

கொக்கின்
ஒற்றைக்கால் தவம்
மீன்களின் வரத்திற்காக

இரட்சகி
கிருபையாய்
உன் காதலை கொடு!

அப்பா குலதெய்வம்
உணர்வதில்லை
இருக்கும் வரை !

வீசும் காற்றில்
விஷமாய் மாறுகிறது
உன் மல்லி வாசம்

நன்றி கெட்டவன்
திட்டுகிறான்
நாய் என்று

உன்னை தொட்ட
பெருமழை
பேரழகானது!

மதத்திலேறிய மனிதன்
அடிக்கடி மாற்றுகிறான்?
போலி பகுத்தறிவு
முகமூடிகளை!!

நீ கால் நனைத்த
காவிரி நீரும்
கங்கை நதியானது!

அடங்க மறுப்பதெல்லாம்
நீ அறைக்கதவை
அறையும் வரையில் தான்

தபால் பெட்டி



பி.ஆர்.கிரிஜா, சென்னை

தையலவள் துள்ளலுடன்
என்னருகே வந்தாள்
ஆசையுடன்
மடலொன்றை என்
வாயில் போட்டாள் !
நாணம் மேலிட
நான் மேலும் சிவந்தேன் !
ஆவலாகக் காத்திருந்தேன்
அவள் வருகைக்கு
ஆடவன் ஒருவன்
மாலையிலே என் வாய் திறந்து அனைத்து
மடல்களையும் அள்ளியெடுத்து உடன் சென்றிட்டான் !
வேதனையில் முகம் வெளிறியதே !
விந்தை ஏதும் நடக்காதோ என ஏங்கி
நானும் தவித்திட
அன்று பூத்த மலர் போல அழகி ஒருத்தி
அருகில் வர
பட்டாம்பூச்சி போல
மனம் படபடவென அடித்திட
அவளும் எனை அணைத்திட்டாள் !
சொக்கித்தான் போனேன் நான்
சுந்தரியின் தீண்டலிலே !



மினி கதை

வறுமை




மலர்மதி,, வேலூர்.

ராஜா வேஷம் போட்டு அசல் ராஜாவாக அருமையாக நடித்து அனைவரின் பாராட்டு பெற்ற பச்சையப்பன், நாடகம் முடிந்ததும் அவருக்கு கிடைத்த சம்பளத்தில் சமையலுக்குத் தேவையான பொருட்களை வாங்கிக்கொண்டு தன் குடிசையை நோக்கி நடந்தார்.

ஈரோட்டில் இது போல் சட்னி சாம்பார் இல்லா இட்லி விற்பனை என்பது தனி business. நிறைய இடங்களில் இது போல் பார்க்க முடியும். இது போல் உங்கள் ஊரில் இருக்கா?

(புகைப்படத்தில் உள்ள கடை ஈரோடு பள்ளிப்பாளையம்.)







தமிழ்நாட்டின் சின்னம் --
1. ஸ்ரீவில்லிபுத்தூர் ஆண்டாள் கோவில் கோபுரம்
2- மொழி -- தமிழ்
3- விலங்கு -- வரையாடு
4- பறவை -- மரகதப் புறா
5- மலர் -- செங்காந்தள் மலர்
6- மரம் -- பனைமரம்
7- பழம் -- பலாப்பழம்
8- பாடல் -- தமிழ்த்தாய் வாழ்த்து
9- விளையாட்டு -- கபடி
10- நடனம் -- பரத நாட்டியம்

திருத்தணி முருகன்



நடேஷ் கன்னா

சூரசம்ஹாரம் நடக்காத ஒரே ஒரு முருகன் தலம்

.

கந்தசஷ்டி விரதமும், சூரசம்ஹார நிகழ்வும் முருகனின் படைவீடுகளில் மிக கோலாகலமாக கடைபிடிப்பது வழக்கம்.

ஆனால் முருகனின் ஒரு படைவீட்டில் மட்டும் இந்த கந்தசஷ்டி விழா நடக்காமல் மிக அமைதியாக இருக்கும்.

அப்படிப்பட்ட முருகனின் படைவீடு தான் திருத்தணி. முருகனின் 5ஆம் படைவீடு

முருகப்பெருமான் சினம் தணிந்து, வள்ளியை மணம் புரிந்து மிக அமைதியாக அமர்ந்து காட்சி தரக்கூடிய தலம் தான் திருத்தணி கோவில் ஆகும்.

தணிகை என்பது சினம் தணிதல். திருத்தணி முருகன் கோயிலில் முருகப்பெருமான் சினம் தணிந்து பக்தர்களுக்கு அருளுகின்றார்.

இதன் காரணமாக இந்த கோயிலில் மட்டும் சூரசம்ஹாரம் திருவிழா நடைபெறுவது இல்லை. இருப்பினும் முருகனின் அருளைப் பெறக்கூடிய கந்தசஷ்டி விழா மட்டும் கொண்டாடப்படுகிறது.





அம்மா : மாத்திரை சாப்பிடும் போது ஏண்டா சட்டையும் பனியனையும் கழட்டுற?
மகன் : வெறும் வயிற்றில் மாத்திரை சாப்பிட வேண்டும் என்று டாக்டர் சொன்னார்.

மாணவன் 1: ரேங்க் கார்டில் உனது அப்பா கையெழுத்தை நீ போட்டிருந்ததை கண்டுபிடித்ததும் சார் என்ன தண்டனை கொடுத்தார்?
மாணவன் 2: இனிமேல் அப்பாவின் கையெழுத்துக்கு பதில் இடது கை பெருவிரல் அடையாளத்தை வாங்கிட்டு வரச்சொல்லிட்டார்!

ஒருத்தி : உனது வீட்டுக்காரரின் பேச்சை அரங்கத்தை விட்டு ஒருவர் கூட எழுந்து போகாமல் கடைசி வரை அமர்ந்திருந்து கேட்டார்களாமே! உண்மையா?
அடுத்தவள் : வெளியே மழை கொட்டோ கொட்டு என்று கொட்டியதே!

நாஞ்சில் சு. நாகராஜன்

தேர்தல்ல தோத்துப்போனா பேரை மாத்திடுவேன்னு சொன்ன தலைவர் பேரை மாத்திட்டாரா?

கட்சியோட பேரை மாத்திட்டார்!

எங்க கட்சித்தலைவர் தலை மறைவா இருக்கார்!

எங்க கட்சியே தலைமறைவாத்தான் இருக்கு! போவியா.....

பணம் இல்லாம சைனீஸ் ஹோட்டலுக்கு சாப்பிடப்போனது தப்பாப் போச்சு!

மாவு ஆட்டச்சொன்னாங்களா?

நாலு பாம்பை பிடிச்சுக்கிட்டு வரச் சொன்னாங்க!

சி.ஆர்.ஹரிகரன், ஆலுவா

கதம்பம்



இங்க பாரு பாப்பா,
நேரா பாரு!
கேமராவில் இருந்து
சிட்டுக் குருவி வரும்
நேராகப் பாரு!

என்றெல்லாம் சொல்லி
வரவழைத்த அந்தப்
புன்னகையை...

ஒரு சிலுவை போல்
சட்டத்திற்குள் அறைந்து
சுவற்றில்
மாட்டிவிட்டார்கள்!

-இரா ரமேஷ்பாபு.

நீ
ஆயிரம் கேள்விகள்
என்னை பற்றி கேட்க
நான்
ஆனந்தமாக
கொஞ்சம் மெய்யும்
நிறைய பொய்யும்
கலந்து சொல்லும் இடத்தில்
தொடங்குகிறது
நமது
புரிதலுக்கான காதல்...!!!

ஆர்.சுந்தரராஜன்



இக்கரையில் இருப்பவர்களை
அக்கரையில் கரை சேர்க்கிறேன்..
ஆனால் என் பெண்ணைத்தான்
கரை சேர்க்க முடியவில்லை ...



எம்.அசோக்ராஜா

படகுக்காரரே.. உங்கள் பெண்ணுக்கு
இன்னும் கல்யாணம் ஆகவில்லையா ?

கல்யாணம் எலலாம் ஆயிடுச்சு ஆனா என்கிட்ட
கோவிச்சுக்கிட் டு வீட்டுக்கே வர்றதே இல்ல....
அதனால அவளை மட்டும் என் படகில் கரை சேர்க்க முடியல....

இவனெல்லாம் பிழைக்கிறது கஷ்டம்னு சொல்லிட்டாரு....

டாக்டர் சொல்லிட்டாரா ?

இல்லை நம்ம தலைவர் சொல்லிட்டார்.... எப்பவுமே உண்மையவே
பேசுறானாம் அதனால அரசியல்ல பிழைக்கறதுக்கு வாய்ப்பு இல்லன்னு

புதுக் கவிதைகள்

பாலையில் மானாய்
சேலையில் மயிலாய் வாழ்ந்தேன்.
தென்றலாய்த் திரிந்தேன், இன்று
ஆலையில் கன்னல் ஆனேன்.
அனலிடை மெழுகாய் ஆனேன்.
பாலையில் மானாய் வெந்து
பரிதவிக் கின்றேன் நீரோ
ஓலையா அனுப்புகின்றீர்
"ஓர்வழி காணேன்" என்று!.

குடந்தை
பரிபூரணன்



வலிக்கு மருந்து
போட்டது குழந்தை
மெல்லிய புன்னகையால்

யாராலும் கூட்டவோ
கழிக்கவோ
இயலாது பிரபஞ்சத்தின்
இலக்கில்
நேரத்தை

ஏ.மூர்த்தி

பலநேரம் கனவுகள்
நம்மை நிம்மதித்
தொட்டிலில் இட்டுத்
தாலாட்டுகின்றன

என் நினைவுக் காட்டில்
தீ
உன் பிரவேசம்

ஓவ்வொரு நொடியும்
மோதி விளையாடுகிறான்
மனிதன் மரணத்துடன்

....நிழலின் மரணம் .....

கொளுத்தும்
கோடை வெயில்
ஆங்காங்கே
சாலை ஓரங்களில்
கொட்டிக் கிடக்கிறது
மரத்தின் நிழல்..
அடுத்த சாலை
விரிவாக்கத்தில்
தனக்கு நிகழப்போகும்
மரணத்தை உணராமல்!

- கயத்தை சத்யா





இன்று-வின்
பழைய இதழ்கள்
படிக்க வேண்டுமா?
www.indhru.in
பார்வையிடுங்கள்



திருச்சிற்றம்பலம்சுரேஷ்

சிறை

எந்த ஜாதியும் தன்னை காப்பாற்றவில்லையென்று... மனதில் புலம்பினான்" ஜாதிக்காக.. மகன் & மருமகளை கொலை செய்த பரத் சிறைச்சாலையில்".

கொத்தனார்

.

கணவனிடம் மனைவி தினமும் புலம்பினாள்" எப்பதாங்க காலி மனையில் சொந்த வீடு கட்ட போறிங்க? என்று."

திருமணம்

.

மகளிடம் தினமும் புலம்பினாள்.. சீக்கிரம் திருமணம் செய்து என் வேலையை பகிர்ந்துக்கொள்ள மருமகன் வேண்டும் என்று.

கூட்டுத்தொகுப்பு

.

தனி புத்தகம் வெளியிட்டு மிகவும் கஷ்டப்பட்ட கவிமணி. கூட்டு தொகுப்பில் இணைய விரும்பினார். குறைந்த பங்கு தொகையில்.

பேசக்கூடாது

பரிசம் போட்டு வந்த பெண்ணிடம் கைப்பேசி எண் வாங்கி வந்த மகனிடம் தாய் கூறினால்"நம்ம வீட்டுக்கு அவ வரும் வரை நம்ம வீட்டு பலம்... பலகீனம்... போன்றவற்றை பேசக்கூடாது" என்றாள்..

வெற்றி & தோல்வி

விளையாட்டில் ஆர்வம் மிகுந்த மகனிடம்"இந்திய அணி வெற்றி & தோல்விகளை நினைத்து ஒரு நாளும் அதிகமா சந்தோசம் படாதே.. அதிகமா வேதனையும் படாதே.. என்று கூறினார்... முன்னாள் விளையாட்டு வீரர் வீரராகவன்.

செல்:7094053241
www.indhru.in
indhrumail@gmail.com



வாட்சப்பில் செய்யலாம்...

1) குழுவின் குணமறிந்து அதற்கேற்ற செய்திகளை அனுப்புங்கள்.
2) தினமும் முக்கியம் என்று நினைக்கும் இரண்டு மூன்று செய்திகள் மட்டும் அனுப்புங்கள்.
3) குழுவில் எதோ ஒரு விசயம் அலசப்படுகின்றது என்றால் யார் மனமும் புண்படாதவாறு உங்கள் கருத்துக்களை தெரிவியுங்கள்.
4) நல்லவற்றை மனம் திறந்து பாராட்டுங்கள்.
5) பிறந்தநாள், திருமண நாள் தெரிந்தால் வாழ்த்துங்கள்.
6) குழுவில் பெருந்தன்மையுடன் நடந்து கொள்ளுங்கள்
7) அரசியல் குழு என்றால் மட்டும் அரசியல் பேசுங்கள்.
8) வாரத்தில் ஒரு நாளாவது எந்த செய்தியும் யாருக்கும் அனுப்பாதீர்கள்.

வாட்சப்பில் செய்ய வேண்டாம்

1) ஒரு செய்தியை போட்டுவிட்டு அடிக்கடி டெலிட் செய்யாதீர்கள்.
2) சாதி, மதம் போன்ற விசயங்கள் பகிர்வதை தவிருங்கள்.
3) குழுவுக்கு தொடர்பு இல்லாத செய்திகளை பதிவேற்றாதீர்கள்.
4) வேறு குழுவில் வந்ததை அப்படியே பரப்பாதீர்கள்.
5) ஒருவரின் செய்திகளுக்கு பதிலுக்கு பதில் உங்கள் பதிலை தெரிவிக்காதீர்கள்
6) இது அரசியல் காலம். அரசியலை குழுவில் புகுத்தாதீர்கள்.



மினி கதை

சு.அருண் பிரகாஷ்

விரக்தி

வலையில் மீன் எதுவும் சிக்காமல்
வெறுங்கையுடன்
வீடு திரும்பினார் மீன ராசிக்கார சுந்தரம்!

மனக்குறை

என் மனக்குறைகளை எல்லாம் நீதான் தீர்த்து வைக்கணும் என கடவுளிடம் வேண்டிக் கொண்டார், குறைதீர்க்கும் அதிகாரி!



கவிஞர் இல.ரவி

● நவக்கிரகம் ஒன்பதும்
ஆண்டுக்காண்டு அடுத்த இடம்//
மரத்தடியில் ஜோதிடர்

● சிவப்பு விளக்குகளில்
வரிசையாய் நின்ற வாகனம்//
தட்டேந்திய சிறுமி

● கோயில் திருவிழாவில்
பக்தைக்கு சாமி வந்தது
அறங்காவலர் அச்சம்

● நெஞ்சு பொறுக்கவில்லை//
எங்கள் நாட்டு அரசியலில்//
அடிமை(களின்) மோகம்

● உயிர் பிரியும் போது
அவளுக்கு தன்னுயிர் வந்தது//
அழகான பெண்சிசு



எழுத்துப் பிணங்கள்..



சசிகலா திருமால்

நீ என்னை பிரியும் போதே
கவிதைகளும் மரித்துவிடுகின்றன...
இதோ இங்கே கூடிக்கிடப்பதெல்லாம்
எழுத்துப் பிணங்கள் மட்டுமே...

இன்று குழந்தைகள் தினமாம்...
மீண்டும் குழந்தையாகத்தான்
ஆசை தோன்றுதடா
உந்தன் கைகளில் தவழ்ந்திடவே...

நீயில்லா தருணங்களில்
எனை ஆரத்தழுவி அரவணைத்து
ஏக்கம் தீர்த்து செல்கிறது...
உந்தன் நினைவுகளை ஏந்திய
உனக்கான என் கவிதைகள்...

மாற்றம் எது காரணம்?

14

பாரதிராஜன் என்கிற ரங்கராஜன் அம்பத்தூரிலிருந்து.

சுரேஷ் ஒரு பெயிண்டர், நல்ல வேலைக்காரன், தன்னிடம் வேலை கொடுக்கும் நபர்களின் மனமறிந்து வீடுகளுக்கு அழகாக பெயிண்ட் அடிப்பதில் பலே கில்லாடி.

வாடிக்கையாளர்களிடம் நன்கு பேசி பணம் விஷயத்தில் மட்டும் விட்டுக்கொடுக்க மாட்டார், ஆனால் வேலை சுத்தமாக இருக்கும். நன்கு பெயிண்ட் அடிப்பதால் அவனைத்தேடி வேலை வரும்.

அவனுடன் இருவர் ஆக மொத்தம் மூவராக பெயிண்ட் வேலை முடியும். சுரேஷ்க்கு மணம் முடிந்தது.அவன் மனைவி மீனா. கணவன் மனைவி இருவரும் சேர்ந்து வேலைக்குசெல்ல பணம் நிறைய வர ஆரம்பித்தது.

முதலில் பெண் பிறந்தது மீனாவுக்கு .இருவருக்கும் சந்தோஷம். பிறகு பையன் பிறந்தான்.பணம் வர வர சுரேஷ் போக்கில் மாற்றம் ஏற்பட ஆரம்பித்தது.

ஆம் முதலில் சொந்தமாக வீடு கட்ட ஆரம்பித்து அதை முடித்தார் சுரேஷ், நல்ல விஷயம். பிள்ளைகளை நன்கு படிக்க வைக்க ஆங்கில வழியில் சேர்த்தார்.

பிள்ளைகளும் நன்கு படித்தனர். ஆனால் சுரேஷ் போக்கில் வார விடுமுறை நாளான சனிக்கிழமை நண்பர்களுடன் சேர்ந்து தவறான பழக்கமான குடிக்கு அடிமையாகி விட்டார் சுரேஷ்.

முதலில் சனிக்கிழமைகளில் வீட்டுக்கு தாமதமாக வர ஆர்ம்பித்து,வீட்டுக்கு வந்து, யாரிடமும் பேசாமல் போய் படுத்து விடுவார் சுரேஷ். கொஞ்ச கொஞ்சமாக மாற்றங்கள் தெரிந்து மனைவி, பிள்ளைகளுடன் சண்டை அடி, உதை எல்லோரும் பயந்து விட்டார்கள், யார் அறிவுரை சொன்னாலும் சுரேஷ் மண்டையில் ஏறவில்லை.

குடிபழக்கம் மூலமாக நிறைய பெயிண்ட் காண்டிராக்ட் தொடர்பு விடுபட சுரேஷ் பயங்கர டென்ஷன் ஆகி தினமும் குடிக்க ஆரம்பித்தார்.

சனிக்கிழமைகளில் பெயிண்ட் அடித்த பின் வரும் பணம் நேராக குடிக்க பயன்படுத்த ஆரம்பித்த சுரேஷ் அந்த போதையில் மயங்கி தினமும் குடிக்க ஆரம்பித்தார். நிறுத்த முடியவில்லை. இதனிடையே அவர் மகள் +2 வில் அதிக மதிப்பண் வாங்கி மாவட்டத்தில் முதல் வீட்டில் ஒரே போட்டோகிராபராகள்,சுரேஷ்க்கு ஒன்றும் புரிய வில்லை. பிறகே அவன் மனைவி சொல்வதை கேட்கும் மூடில் இல்லாத நிலை.

மறுநாள் காலை எழுந்ததும் மகன், மகள் இருவரும் சுரேஷிடம் பேசாமல் செல்ல என்ன விபரம் என்று புரியாத போது அவர் மனைவி விஷயம் சொல்ல அதிர்ச்சியால் சுரேஷ் கீழே விழ, உடனே ஒடிவந்த பிள்ளைகள் ஆம்புலன்ஸ் மூலமாக அரசு மருத்துவ மனையில் சேர்த்து, சிகிச்சை முடிந்த பிறகு, டாக்டர் குடிபழக்கம் இனி கூடவே கூடாது என்று அறிவுறுத்த, சுரேஷ் குடிபழக்கத்திலிருந்து வெளியே வந்த பழையபடி சுரேஷ் ஆக மாறினார்.

கண்ணாடிப் பக்கம்



சுதந்திரம்
வாங்கித் தந்த காந்தி
அன்று
சும்மா இருந்திருக்கலாம்
அகிம்சை வாழ வேண்டிய
உலகில்
இம்சைகள் வாழ்ந்து கொண்டிருக்கிறது
கள்ள நோட்டில் இருந்து
கள்ள ஓட்டு வரை

பாரதி முத்து

அம்மாவும், மகனும்:

==========

அம்மா: பூண்டை வெட்டி உள்ள என்னடா தேடறே ?

மகன்: பூண்டுக்குள்ள நிறைய மகத்துவங்கள் இருக்குனு டீவிலே ஒரு டாக்டர் சொன்னாரு, அதான் தேடறேன்....

டீ. என். பாலகிருஷ்ணன்

கதைகளில் வரும் பெயர்கள் சம்பவங்கள் அனைத்தும் கற்பனையே...
யாரையும் எதையும் குறிப்பிடுவன அல்ல...
அழகிய ஆரம்பம் இன்று ஈ இதழ் வெளியிடுபவர்
ஆசிரியர் திரு.வெ.கோபிநாத் இன்று ஈ இதழ் -
29 சக்தி நகர், ஆதம்பாக்கம், சென்னை செல் 7094053241



இன்று இதழை படித்ததற்கு நன்றி